# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 58/2013

Deposition of witness for : PW6

Name : சுந்தரம்

Father's / Husband Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 04th day of March 2025.

**04-03-2025**

**A1 to A4, A6 to A10 and A12, A13 present. A14 produced. A5, A11 charges abated.**

**முதல் விசாரணை:-**

நான் தற்போது சேலம் மாவட்டம், சேலம் வட்டம், நாழிக்கல்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து 31.09.2016 ம் தேதி பணி ஓய்வு பெற்று ஆத்தூர், நரசிங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.02.2011 ம் தேதி மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராகவும், 01.02.2011 மற்றும் 02.02.2011 ம் தேதி

அஸ்தம்பட்டி பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்து வந்தேன். கடந்த 01.02.2011ம் தேதியன்று அஸ்தம்பட்டி காவல் ஆய்வாளர் மூன்று எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு எடுத்து வைத்திருப்பதாகவும், அவர்களை விசாரணை செய்வதற்கு உடன் இருக்குமாறும் தொலைபேசி மூலமாக அழைத்ததின் பேரில் நானும், குமாரசாமிபட்டி கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் மாலை 5.00 மணிக்கு சென்றோம். அங்கு எதிரிகளான பாலு (எ) பாலகிருஷ்ணன் (A1), கரிகாலன்(A2), சிக்கந்தர் (A3) ஆகியோர்கள் இருந்தார்கள்.

பாலு (எ) பாலகிருஷ்ணன் (A1) என்பவரை அன்று மாலை 5.30 மணிக்கு காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் குற்ற வழக்கில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

கரிகாலன்(A2) என்பவரை அன்று இரவு 8.40 மணிக்கு காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் குற்ற வழக்கில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

சிக்கந்தர்(A3) என்பவரை அன்று இரவு 12.00 மணிக்கு காவல் ஆய்வாளர் விசாரிக்க அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் குற்ற வழக்கில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பித்து எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

அதனடிப்படையில் காவல் ஆய்வாளர் 02.02.2011ம் தேதி காலை ஆத்துக்காடு பாலம் வருமாறு எங்களிடம் சொன்னார். அதனடிப்படையில் நானும்,. கிராம உதவியாளர் ராஜகோபல் என்பரும் ஆத்துக்காடு பாலம் அருகே சென்றோம். அங்கே காவல் ஆய்வாளரிடம் பாலு (எ) பாலகிருஷ்ணன (A1) பாலத்தின் இடப்பக்கம் உள்ள முற்புதரில் இருந்து மரக்கைப்பிடியுன் கூடிய இரும்பு பூன் போட்ட வீச்சறிவாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை, ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P17** ஆகும். அந்த வீச்சறிவாள் நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–19** ஆகும். பாலு (எ) பாலகிருஷ்ணன (A1) கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ–P18** ஆகும்.

அன்று காலை 7.30 மணிக்கு கரிகாலன்(A2) என்பவர் ஆத்துக்காடு பாலத்தின் அருகே உள்ள முற்புதரில் இருந்து மரக்கைப்பிடியுன் கூடிய

இரும்பு பூன் போட்ட வீச்சறிவாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை, ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P19** ஆகும். அந்த வீச்சறிவாள் நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–20** ஆகும். 2ம் எதிரி கரிகாலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ–P20** ஆகும்.

பின்னர் அன்று காலை 8.00 மணிக்கு சிக்கந்தர்(A3) என்பவர் ஆத்துக்காடு பாலத்தின் அருகே உள்ள முற்புதரில் இருந்து மரக்கைப்பிடியுன் கூடிய இரும்பு பூன் போட்ட வீச்சறிவாள் ஒன்றை எடுத்து ஆஜர் செய்ததை, ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P21** ஆகும். அந்த வீச்சறிவாள் நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–21** ஆகும். 3ம் எதிரி சிக்கந்தர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ–P22** ஆகும்.

அதன் பின்னர் அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு தீவட்டிப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் குமார் என்பவர் சைக்கிள் கடையில் இருந்த பஜாஜ் TN L 8105 என்ற இருசக்கர வாகனத்தை 2ம் எதிரி கரிகாலன் அடையாளம் காட்டியதை காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும்,

கிராம உதவியாளர் ராஜகோபல் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ–P23** ஆகும். அந்த பஜாஜ் TN L 8105 என்ற இருசக்கர வாகனம் நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ–22** ஆகும். அது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>8 முதல் 10 மற்றும் 14 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**<u>1,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

**<u>2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளின் வழக்கறிஞர் யாரும் ஆஜரில் இல்லை. குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**<u>4, 7, 12 மற்றும் 13 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.